# சம்மாந்துறை பிரதேச சபையின் 16 வது கூட்டறிக்கை
# 2019.06.11

சம்மாந்துறை பிரதேச சபையின் 16 ஆவது அமர்வு 2019.06.11 ஆம் திகதி செவ்வாய் கிழமை காலை 9.30 மணிக்கு சம்மாந்துறை பிரதேச சபையின் சபா மண்டபத்தில் தேசிய கீதம் மற்றும் இறை சிந்தனையுடன் கௌரவ தவிசாளர் ஏ.எம்.முஹம்மட் நௌசாட் அவர்களின் தலைமையில் ஆரம்பமானது.

**சமூகமளித்த கௌரவ உறுப்பினர்கள்**

| | | |
|---|---|---|
| 01. ஜனாப். ஏ.எம்.எம் நௌசாட் | கௌரவ தவிசாளர் | அ.இ.ம.கா |
| 02. திரு. வீ. ஜெயச்சந்திரன் | கௌரவ உப தவிசாளர் | ஸ்ரீ.சு.க |
| 03. ஜனாப். ஐ.எல். நஜீம் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 04. ஜனாப். ஏ. அச்சி முஹம்மட் | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |
| 05. திருமதி. ஆர். வளர்மதி | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |
| 06. திரு. என். கோவிந்த சாமி | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 07. ஜனாப். ஏ.சி. முஹம்மட் சஹீல் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 08. ஜனாப். எம்.ரீ. பௌசுள்ளாஹ் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 09. ஜனாப். ஐ.எல்.எம். மாஹிர் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 10. ஜனாப். ஏ.எம்.எம் றியாஸ் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 11. ஜனாப். ஏ.எல்.எம். ஜிப்ரி | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 12. ஜனாப். எஸ். நளீம் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 13. ஜனாப். ஏ. யூசுப் லெவ்வை | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 14. திருமதி. கே.எம். இன்பவதி | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 15. திருமதி. எம்.எஸ். சரீபா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 16. திருமதி. எஸ்.எம். சித்தி நிலுவ்பா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 17. திருமதி. கே.எல். சிஹாமா | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 18. ஜனாப். வை.பீ.எம். முஸம்மில் | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |

**சமூகமளிக்காத கௌரவ உறுப்பினர்கள்**

| | | |
|---|---|---|
| 01. ஜனாப். எஸ்.எம்.எம். முஸ்தபா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 02. ஜனாப். யூ.எல். அஸ்வர் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |

**சமூகமளித்த உத்தியோகத்தர்கள்**

| | |
|---|---|
| 01. ஜனாப். எம்.ஏ.கே. முஹம்மட் | செயலாளர் |
| 02. திருமதி. ஏ.எல். நுஸ்றத் பானு | அலுவலக உதவியாளர் |

**கௌரவ தவிசாளர் ஏ.எம்.எம். நௌசாட்**

பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ராஹீம். எல்லாப்புகழும் இறைவனுக்கே, எல்லோரையும் இந்த 16 வது அமர்வுக்கு வரவேற்றவனாக,

கௌரவ உறுப்பினர் முஸ்தபா, கௌரவ உறுப்பினர் அஸ்வர் இருவரும் இன்றய சபை அமர்விற்கு வருகைதர முடியாதென்று அறிவித்தல் விடுத்திருக்கின்றார். அவர்களுக்கு விடுமுறை வழங்க சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.எம் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.சீ.எம். சஹீல் |

இந்த அமர்வின் முதல் அம்சமாக கடந்த கூட்டறிக்கை சமர்ப்பித்தலும் அங்கீகாரம் பெறலும். இந்தக் கூட்டறிக்கையில் ஏதாவது திருத்தங்கள் இல்லாவிடில் ஒருவர் பிரேரித்து ஆமோதிக்கலாம்.

**தீர்மானம் 01**

சென்ற மாதக் கூட்டறிக்கையினை ஏற்றுக் கொள்வதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.சி.எம். சஹீல் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.ரீ. பௌசுள்ளாஹ் |

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

இன்று கௌரவ உறுப்பினர் சஹீல் அவர்களுக்கும் அவர் மணைவிக்கும் பெண் குழந்தை பிறந்திருப்பதாக அறியத்தந்திருக்கின்றார். அவர்கள் இருவருக்கும் சபை சார்பில் வாழ்த்துவதோடு,

இலங்கை உள்ளூராட்சி சம்மேளனத்தின் உள்ளூராட்சி பெண் உறுப்பினர்களுக்கான மாவட்ட சம்மேளனத்தின் தலைவியாக கௌரவ சுல்தான் சரீபா அவர்கள் நியமிக்கப்பட்டு எமது சபைக்கு பெருமை தேடித் தந்துள்ளார். எமது சபை சார்பில் அவரை வாழ்த்துவதோடு, அவர் எமது ஊருக்கும், எமது சபைக்கும் புகழ் தேடித்தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

சென்ற ஞயாயிற்றுக் கிழமை வெளியான **லங்கா தீப** சிங்களப் பத்திரிகையில் அரபு எழுத்தில் அமைந்த பெயர்பலகை உள்ளதனால் சம்மாந்துறை வேறொரு நாடா? என்றும் இன்னும் பல விடயங்களை உள்ளடக்கியதாக அப் பத்திரிகை வெளியாகியுள்ளது. அதனை நீங்களும் அறிந்திருப்பீர்கள். இதில் பிரசுரிக்கப்பட்டுள்ள விடயங்கள், படங்கள் உண்மையானது. ஆனால் அவைககள் கூறப்பட்ட விதம் அதாவது அரபு எழுத்து பெயர் பலகை எனும் போது அவைகள் பள்ளிவாசல்கள் அல்லது மத்ரசா போன்றவைகளை மக்கள் இலகுவாக அடையாளம் கான்பதற்காக அல்லது அரபு நாடுகளின் பண ஒதுக்கீட்டினால் நடாத்தப்படுகின்றவையின் காரணமாகவும் அரபு எழுத்துக்கள் பொறிக்கப்பட்டிருக்கலாம். அரபு எழுத்தைக் காரணம் காட்டி எழுதியுள்ளனர். இக்கட்டுரையின் ஆரம்பம், 2006 ஆம் ஆண்டு றம்றெக் விபத்தக்குள்ளாகி சாரதி இறந்த விடயத்தில் இருந்தே அரம்பிக்கப்படுகின்றது. அதாவது முஸ்லிம் சமூகம் கொடுரமான சமூகமாகக் காட்டி ஆரம்பிக்கப்பட்டுள்ளது, அது உண்மையாக கண்டிக்கப்பட வேண்டியதற்கு அப்பால் இது பற்றி அவர்களுக்கு தெளிவு படுத்த வேண்டும்.

இப்பத்திரிகை எமது மக்கள் மத்தியில் படிப்பது குறைவு. ஆனாால் சிங்கள மக்கள் மத்தியில் சம்மாந்துறை பற்றி தப்பபிப்பிராயம் ஏற்படலாம். தலைக்கவசம் அணியாமல் செல்வது, மண் அகழ்வு இடம்பெறுவது இங்கு மாத்திரமல்ல பல பிரதேசங்களிலும் இடம்பெறுகின்றது. ஆனால் இவை சம்மாந்தறையில் மாத்திரம்தான் நடைபெறுகின்றது, சம்மாந்துறை கொடுரமான பின்னனியில் உள்ள ஊர் என்று வந்துள்ளமை எம்மத்தியில் மிகவும் மன வேதனையடைகின்றது. இப் பத்திரிகையாளர் அன்றய தினம் என்னையும் சந்தித்தார். அதன் போது சமத்துவம் பற்றி கலந்துரையாடப்பட்ட விடயங்களும் சிறிதளவு பிரசுரிக்கப்பட்டுள்ளது. இதனை நாம் நமக்குள் ஏன் இவ்வாறு நடைபெறுகின்றது? இதனை எவ்வாறு நாம் திருத்திக் கொள்ள முடியும் என்று சிந்திக்க வேண்டும்.

இச் சந்தர்ப்பத்தில் இளைஞர்கள் தலைக்கவசம் அணியாமல் பாதுகாப்புப் படையினரிடம் மோதுவது பாரிய பிரச்சினையாக உள்ளது. இதனை நாம் பெற்றோர்களிடம் கூறி சமூகத்தில் நாம் தினிக்க வேண்டியுள்ளது. சட்டத்தை மதிப்பதற்குரிய வேலைத் திட்டங்களை கொண்டு வராவிட்டால் எம்மால் வேறு எந்தத் திட்டங்களையும் மேற்கொள்ள முடியாமல் இருக்கும். இதற்கு அனைத்து உறுப்பினர்களும், உத்தியோகத்தர்களும் (DO, EDO, GS) முன்வர வேண்டும். ஏனென்றால் சிறிய பிரச்சினையாக இருந்தாலும் தற்போது அவைகள் தேசிய பிரச்சினையாகவே உருவாகின்றது. எனவே, நாம் அனைத்து விடயங்களிலும் மிகவும் கரிசணையோடு நடந்துகொள்ள வேண்டும்.

எமது பகுதியில் நாம் பெரும்பான்மையாக இருந்தாலும், பெரும்பான்மையாக இருப்பவர்கள் மத்தியில் எமது மக்கள் சிறுபான்மையாக வாழ்கின்ரனர். அவர்களை பாதுகாப்பதே எமது கடமை. பெரும்பான்மையினரிடம் எமது சமூகம் பற்றி இருக்கின்ற தப்பபிப்பிராயங்களை மாற்றுவதற்கு நாம் முயற்சிக்க வேண்டும். எம் மத்தியில் செய்கின்ற பிழைகளையும் நிவர்த்தி செய்து அதாவது சட்டத்தை மதித்து நடப்பது மிகவும் அவசியமாகும். இதற்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். இப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ள தப்பபிப்பிராயங்கள் பற்றி உத்தியோக பூர்வமாக 'வசந்த சந்திரபால' அவர்களுக்கு தெளிவுபடுத்தி எழுத்து மூலம் அனுப்பி வைக்கலாம் என்று நினைக்கின்றேன். இது பற்றி கௌரவ உறுப்பினர்களின் கருத்துக்களை தெரிவிக்கலாம்.

**கௌரவ உப தவிசாளர் வீ. ஜெயச்சந்திரன் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, லங்காதீப பத்திரிகை ஆக்கத்திற்கு மறுமொழி எழுதுவதாக தெரிவித்தீர்கள் எமக்கு எழுத்து மூலம் ஏதாவது விபரங்கள் கோரப்பட்டால் பதில் எழுதுவது சிறப்பாக இருக்கும். அவ்வாறு இல்லாவிட்டால் அதற்கு அவர் மீண்டும் பதில் எழுதி தொடர்கதையாக போய்விடும். எனவே அதனை நிறுத்துவது சிறந்தது என்பது எனது கருத்து.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இதற்கு பதில் எழுதுவதற்கு அப்பால் அவர் தவறான கருத்துக்களை முன்வைத்திருக்கின்றார் என்பதனை சுட்டிக்காட்டினால் சிறப்பாக இருக்கும் என்று நினைத்தேன். ஆனால் சபையின் முடிவு எதுவோ அதன்படி நடக்கலாம். நான் எழுதுவதானால் உங்கள் சார்பிலேயே எழுதுவேன்.

**கௌரவ உறுப்பினர் வை.பீ.எம். முஸம்மில் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இது சம்பந்தமாக விளக்கம் கொடுப்பதானால் முஸ்லிம் ஊர்களையும், முஸ்லிம் கிராமங்களையுமே உதாரணமாக காட்ட வேண்டி வரும். எனவே இதனை அவ்வாறே விட்டுவிடுவது சிறந்தது என்பது எனது அபிப்பிராயம்.

**கௌரவ உறுப்பினர் எம்.எஸ். சரீபா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, என்னைப் பொறுத்தவரையில் இதற்கு சில கருத்துக்களை தெரிவித்தால் இவர்களும் இதற்கு பதில் தரக்கூடியவர்களாக இருக்கின்றார்கள் என்று அவர்கள் பின் தங்கக்கூடிய நிலை ஏற்படலாம். இதற்கு நீங்கள் உண்மையான விளக்கத்தை தெரிவிப்பது சிறந்தது என்று நினைக்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் என். கோவிந்தசாமி அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இது தொடர்பாக சம்மாந்துறையில் உள்ள புத்தி ஜீவிகள் உலமாக்களுடன் கலந்துரையாடி, அப் பத்திரிகையில் கொடுக்கப்பட்ட விபரங்கள் பிழையானவைகள். ஏனென்றால் கௌரவ உறுப்பினர்கள் கூறியது போன்று தமிழீழ விடுதலைப்புலிகளின் தாக்குதலின் போதும் சிங்களப் பிரதேசத்தில் இருந்த தமிழர்களுக்கு எதுவும் இடம்பெறவில்லை. ஆனால் 21 ஆந் திகதிய தாக்குதலின் பின் பரவலாக முஸ்லிம்கள் தாக்கப்படுகின்றனர். அதற்கு காரணம் முஸ்லிம்களின் வளர்ச்சி கண்டு பேரினவாதிகள் அஞ்சுகின்றனர். எது எவ்வாறு இருந்தாலும் நாங்கள் புத்தி சாதூரியமாக செயற்பட வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
எம்மைப் பொறுத்தவரையில் எமது இனத்தை முன்வைத்து ஏதோ ஒரு கும்பலினால் நடாத்தப்பட்ட விடயம் பேரினவாதத்தை பொறுத்தவரையில் முஸ்லிம்களினால் நடாத்தப்பட்ட விடயம் என்றே செயற்படுகின்றனர். இதில் குறிப்பிடப்பட்ட விடயம் சிறு கும்பல் செய்த செயலினை எமது ஊர் செய்ததாக விபரித்துள்ளார்கள். சிறுபான்மை முஸ்லிம்களுக்கு அதிகமாக வர்த்தக போட்டி காரணமாகவே தாக்குதல்கள் இடம்பெறுகின்றது. இதில் கூறப்பட்டவாறு மிகவும் கவனமாக நம்பிக்கையாளர் சபை, மஜிலிஸ் அஸ்ஸூராவுடன் கலந்தாலோசனை செய்துவிட்டு அவர்கள் இதனை செயற்படுத்துவார்களானால் எமது சபை செயற்படுத்தத் தேவையில்லை. பொதுவாக எவராவது உங்களிடம் ஏதாவது கருத்துக்களை தெரிவிக்கும்படி வந்தால் நீங்கள் பேசுவதற்கு முன்

பெரும்பான்மை இனத்திற்குள் வாழ்கின்ற சிறுபான்மை இன மக்களைப் பற்றி சிந்தித்து அதற்கு ஏற்றவாறு கருத்துக்களை தெரிவிக்க வேண்டும் என்று கௌரவ உறுப்பினர்களை வேண்டிக்கொள்கின்றேன்.

எமக்கு நிதிப் பிரிவில் பாரிய பிரச்சினை வருகின்றது. தற்போது இருக்கின்ற நிதி உதவியாளரால் அவ் வேலைகளைச் செய்ய முடியாது என்று கூறுகின்றார். சபையின் பாரிய பலவீனம் கணக்காளர் அதற்குரிய திறமையுள்ள உத்தியோகத்தர்கள் இங்கு இல்லை. சென்ற சபையில் தவிசாளர்கள் அனைவரும் இணைந்து நிதி உதவியாளர் என்று அபிவிருத்தி உத்தியோகத்தர்களிடம் அதனை பொறுப்புக் கொடுப்பதற்கு நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்டது. நியமனமும் வழங்கப்பட்டது. ஆனால் அது சட்டத்திற்கு முரனானது என்று கூறி அதனை மீண்டும் நடாத்தவில்லை. கணக்காய்வு உத்தியோகத்தரினால் கோரப்பட்ட கேள்விகளுக்கு பதில் அளிக்கக் கூடிய உத்தியோகத்தர் இல்லை. அதற்கான ஆளணியும் இல்லை. இது பாரிய சவாலாக உள்ளது.

**தீர்மானம் 02**

சென்ற மாதம் 2019.05.01 தொடக்கம் 2019.05.31 வரையிலான செலவீனங்களும் மற்றும் கொடுப்பனவுகளுக்குமான செலவு விபரங்களுக்கு அனுமதி வழங்க சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | என். கோவிந்தசாமி |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | கே.எல். சிஹாமா |

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

திண்மக் கழிவு முகாமைத்துவத்திற்கு இரண்டு நிறத்தினாலான பைகள் வழங்கியுள்ளோம். அதில் உக்கக்கூடிய பொருட்களை அதாவது வீட்டில் உபயோகிக்கப்படும் சமயல் கழிவுகளை அப் பையினுள் போடும் போது பொருத்தமில்லாமல் இருக்கின்றது. அதற்கு பிளாஸ்டிக் கூடைகளை கொள்வனவு செய்வதற்கு முயற்சி எடுத்த போது முன்னால் இராஜாங்க அமைச்சர் கௌரவ HMM.ஹரீஸ் அவர்கள் மதிப்பீட்டறிக்கை கேட்டதற்கமைவாக பிளாஸ்டிக் கூடைகளுக்கான மதிப்பீட்டறிக்கை கொடுக்கப்பட்டுள்ளது. அவை வெற்றியளிக்கலாம். அந் நிதி கிடைக்காத பட்சத்தில் சபை நிதியில் இருந்து குறித்த கூடைகளை கொள்வனவு செய்ய வேண்டும்.

**தீர்மானம் 03**

உக்கக்கூடிய கழிவுகளை வீடுகளில் இருந்து சேகரிப்பதற்கு பிளாஸ்ரிக் கூடைகளுக்காக கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் HMM.ஹரீஸ் அவர்களிடம் நிதி ஒதுக்கீடு கோரப்பட்டுள்ளது. குறித்த நிதி கிடைக்காத பட்சத்தில் சபை நிதியில் இருந்து பிளாஸ்ரிக் கூடைகளை கொள்வனவு செய்வதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஆர். வளர்மதி |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எல்.எம். ஜிப்ரி |

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

நீங்கள் அனைவரும் Road Inventry தந்துள்ளீர்கள். நாம் ஊர் சார்பாக இதற்கான இறுதி பெயர்களை தெரிவு செய்ய வேண்டும். இக் குழுவிற்கு ஊரின் நிபுனத்துவமுள்ள சரித்திரம் தெரிந்த நபர்களை உள்வாங்க வேண்டும். எனவே தங்களுக்கு அறிந்த நபர்களைக் குறிப்பிடலாம்.

**தீர்மானம் 04**
சேதனப் பசளைகளை 5Kg, 10Kg ஆக பொதி செய்வதற்கு பைகளைக் கொள்வனவு செய்வதற்கும், குப்பைகளை தரம் பிரித்து வழங்குவதற்கான பச்சை, செம்மஞ்சள் நிறத்தினாலான பைகளைக் கொள்வனவு செய்வதற்கும், சேதனப் பசளை பொதி செய்யும் பைகள், ஒட்டும் இயந்திரம் மற்றும் அதனை அளவிடுவதற்கான 5 - 15 Kg வரையான டிஜிட்டல் தராசினையும் கொள்வனவு செய்வதற்கும் சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ. அச்சிமுஹம்மட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | என். கோவிந்தசாமி |

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
தற்காலிக அடிப்படையில் கடமையாற்றும் ஊழியர்களுக்கு 06 மாத கால சேவை முடிவடைந்துள்ளதால் அவர்களுக்கு மீண்டும் 06 மாத காலம் நீடிப்பு வழங்க வேண்டும்.

**கௌரவ உப தவிசாளர் வீ. ஜெயச்சந்திரன் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, தற்காலிக அடிப்படையில் வேலை செய்பவர்களில் கடமைகளை உதாசீனம் செய்பவர்களை நிறுத்திவிட்டு மற்றயவர்களுக்கு கால நீடிப்பு வழங்க வேண்டும். ஒழுக்கம், பணிவு போன்றவற்றை கடைப்பிடிப்பவர்களே இந்த சபையில் கடமையாற்ற வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
தற்காலிக ஊழியர்கள் யாராவது தவறு செய்தால் அவர்களுக்கு சந்தர்ப்பங்களை வழங்க வேண்டும். அதனை மீறி குற்றம் செய்தால் கண்டிப்பாக தண்டிக்கப்பட வேண்டும். எந்த சபையிலும் இல்லாத சலுகைகள் எமது சபையில் தற்காலிகமாக கடமையாற்றும் ஊழியர்களுக்கு வழங்கப்படுகின்றது. ஏனென்றால் அவர்களது குடும்பங்கள் வாழ வேண்டும் என்ற நோக்கில் வழங்கப்படுகின்றது. ஆனால் தனது கடமையினை துஸ்பிரயோகம் செய்பவருக்கெதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும். நீடிப்புக்கள் வழங்கப்படுகின்ற போது கடமையை அலட்சியப்படுத்தபவர்களை நீக்கிவிட்டு மற்றயவர்களுக்கு நீடிப்பு வழங்க வேண்டும்.

**தீர்மானம் 05**
தற்போது தற்காலிக அடிப்படையில் கடமையாற்றும் சுகாதாரத் தொழிலாளிகள், சாரதிகள், வேலைத் தொழிலாளிகள் ஆகியோரின் 06 மாத கால சேவை அனுமதி முடிவடைந்துள்ளதால் அவர்களுக்கு 06 மாத கால நீடிப்பு வழங்க சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எம்.எம் றியாஸ் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எல்.எம். ஜிப்ரி |

**கௌரவ உறுப்பினர் ஏ. அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, சிலர் தற்காலிகமாக இருக்கும் போது நன்றாக நடந்துவிட்டு நாம் முயற்சி எடுத்து அவர்கள் நிரந்தரமாக்கப்பட்டவுடன் அவர்கள் நினைத்த மாதிரி நடந்து கொள்ளக்கூடாது. யாராக இருந்தாலும் நாம் சொல்கின்ற வேலைகளை செய்யாவிட்டால் அவர் நிரந்தரமான ஊழியராக இருந்தாலும் அவருக்கு இடமாற்றம் கொடுத்து நமது தேவைகளை செய்யக்கூடியவர்களை இணைத்துக் கொள்ள வேண்டும்.

சம்மாந்துறையைப் பொறுத்தவரையில் தமிழ் மக்கள் சிறுபான்மையினர். ஆனால் எந்த ஓர் இடத்திலும் அவ்வாறு கருதி நாங்கள் நடந்து கொள்ளவில்லை. ஒரு சிலர் நாங்கள் புறக்கனிக்கப்படுகின்றோம், எமது பிரதேசங்கள் முன்னேற்றப்பட வில்லை என்று கூறுகின்றார்கள். அவ்வாறானால் சில பிரதேசங்களில் பள்ளிவாசல்கள் பாடசாலைகள் இன்னும் சீர் செய்யப்படாமல் உள்ளது. ஆனால் நாங்கள் அவ்வாறு கூறுவதில்லை. நாங்கள் மற்ற இணத்தை

கௌரவித்திருப்பது நீங்கள் நன்கு அறிந்திருப்பீர்கள். இன ரீதியாக எந்த அரசியல் வாதிகளும் செயற்படக்கூடாது.

சென்ற முறை மூத்த ஊடகவியளாளர் இரா துரைரட்ணம் அவர் சம்மாந்துறை சம்பவம் பற்றி எழுதியிருந்தார். இது தொடர்பாக ஆரம்ப சபை அமர்வில் கூறியிருந்தேன். அதற்குப் பல ஆதாரங்கள் என்னிடம் உள்ளது. ஒரு காலகட்டத்தில் சம்மாந்துறை என்ற ஆள் அடையாள அட்டையைப் பார்த்தவுடன் எந்தப்பிரதேசத்திற்கும் செல்லக்கூடியவாறு இருந்தது. ஆனால் இன்று சம்மாந்துறை என்றால் மிகவும் கண்டிப்புடன் நடந்து கொள்வது மன வேதனைக்குரிய விடயம். இதில் இருந்து நாங்கள் மீண்டு வர வேண்டும். எதிர்கால சமூகத்திற்கு இடம் வழங்க வேண்டும். வேறு இணங்களுக்கிடையில் ஏற்படுகின்ற கருத்து வேறுபாடுகளுக்கு உங்கள் மூலம் பதில் வரவேண்டும். தங்களின் மூலமே ஒற்றுமையை கட்டியெழுப்ப முடியும் என்று கௌரவ உறுப்பினர்களிடம் விணயமாக வேண்டிக் கொள்கின்றேன்.

மேலும் எமது ஊரைச் சேர்ந்த எத்தனையோ அப்பாவி முஸ்லிம் மக்கள் படுகொலை செய்யப்பட்டனர். ஆனால் நாங்கள் அதற்காக எந்தக் குளப்பங்களையும் ஏற்படுத்த வில்லை. எங்களிடமும் தரவுகள் இருக்கின்றது. நாங்கள் எதுவும் செய்யாமல் அதிகமானவர்களை இழந்துள்ளோம். அவ்வாறிருந்தும் எம் மக்கள் மத்தியில் அவ்வாறான கீழ்தரமான சிந்தனை உருவாகவில்லை. நாங்கள் உங்களை எங்களது உடன் பிறவா சகோதரராகத்தான் கருதுகின்றோம். இனியும் அதுவே தொடர வேண்டும். சமாதானமும் மலர வேண்டும். நாட்டுக்கு நாங்கள் யார் என்பதனை எடுத்தக் காட்ட வேண்டும். இது சம்மாந்துறையில் இருந்து உருவாக வேண்டும். இதற்கு நீங்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். இனியும் சம்மாந்துறையை சுட்டிக்காட்டி பிழையான ஊராக பேசக்கூடாது. என்று கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ உப தவிசாளர் வீ. ஜெயச்சந்திரன் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, நான் முதலில் கூறிய விடயம் அதாவது தற்காலிக அடிப்படையில் கடமையாற்றும் ஊழியர்களை இடைநிறுத்தினால் அந்நபர் இங்குள்ள சபை உறுப்பினர்களிடம்தான் உடனடியாக வருவார்கள். எனவே சக உறுப்பினர்களிடம்கூறுவது தயவு செய்து இவ்வாறான நபர்களுக்கு தவிசாளரிடம் எந்த சிபார்சும் செய்ய வேண்டாம். ஏனென்றால் ஓர், இருவருக்கு தண்டனை வழங்கினால்தான் மற்றவர்களும் பயந்து நடப்பார்கள்.

சக உறுப்பினர்கள் பேசிய விடயங்கள் கடந்த கால நிகழ்வுகள் அதனை இன்னும் பேசிக் கொண்டிருக்காமல் இனிவரும் காலங்களில் சுமூகமாக நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து செயற்பட வேண்டும். சபையைப் பொறுத்தவரையில் நீங்கள் அனைவரும் ஒற்றுமையாக எங்களுக்கு கரம் கொடுத்து வழிநடாத்துகின்றீர்கள். அந்தவகையில் நாங்கள் உங்களுக்கு நன்றி கூற கடமைப்பட்டுள்ளோம். அதற்கு மேலதிகமாக சம்மாந்துறை பிரதேச சபையில் எந்த ஒரு இன முரன்பாடான செயற்பாடுகள் இல்லாத சூழ்நிலை அனைத்து சமூகங்களுக்கும் அதாவது சிங்களவராக இருந்தாலும் அவருக்கும் நியாயம் வழங்கப்படும் என்ற ரீதியில் எமது சபை இயங்கிக் கொண்டிருக்கின்றது.

எமது நாட்டில் அரசியல் வாதிகள்தான் பிரிவினைகளைத் தோற்றுவிக்கின்றார்கள் என்று கௌரவ உறுப்பினர் கூறினார் அவ்வாறல்ல அதிகாரிகள்தான் அரசியல் வாதிகளை தவறான வழியில் நடாத்துபவர்கள். அதிகாரிகள் தவறுதலான விடயங்களை தங்களுக்கு சாதகமாக மாற்றுவதற்கு அரசியல் வாதிகளை பயன்படுத்துகின்றனர். ஒவ்வொரு அரசியல் வாதிகளையும் நான் பார்த்தளவிலே எந்தப் பிரச்சினையாக இருந்தாலும் இருசாராரையும் ஒன்று சேர்த்துவிட்டுத்தான் வருகின்றனர். ஆனால் அதிகாரிகள்தான் இரவில் ஆவணங்களை எடுத்துக் கொண்டு சென்று இவ்விடத்திற்கு இவ்வாறு வழிகள் உள்ளது என்று பல விடயங்களைக்கூறி மனதில் பிரிவினையை உண்டுபன்னுகின்றனர். ஆகவே, நாம் அதிகாரிகளையும் இவ்விடத்தில் ஒற்றுமையான சிந்தனையுடன் செயற்படுங்கள் என்று தெளிவு படுத்த வேண்டும். மீண்டும் கூறுவது பதிலீட்டு ஊழியர்களுக்கு நீடிப்பு வழங்குவதை சிந்தித்து வழங்குங்கள் என்று வேண்டுகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் எம்.எஸ். சரீபா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இலங்கை உள்ளூராட்சிமன்ற பெண்கள் பிரதிநிதி தலைவியாக வருவதற்கு எனக்கு வாக்களித்த எனது உறுப்பினர்கள் அனைவருக்கும் நான் நன்றியை தெரிவித்துக் கொள்வதுடன், இந்தத் தலைமைப் பொறுப்பை நான் அனைவருக்கும் இனங்கியவாறு இலங்கை பிரஜையாகக் கட்டுப்பட்டு எமது சபைக்கும் கட்டுப்பட்டு நடந்து கொள்வேன் என்றும் நான் சபையோர் அனைவரும் முன்னிலையில் தெரியப்படுத்துகின்றேன்.

அத்துடன் முஸ்லிம்களின் பிரச்சினை இன்று தலைதூக்கி இருப்பதென்றால் எம் நாட்டில் பிறந்து வாழ்ந்தவர்கள்தான் தமிழர்களும், முஸ்லிம்களும், சிங்களவர்களும். ஆனால் பிரச்சினை என்று வந்த போது முஸ்லிம்களையோ, தமிழர்களையோ வேறுபடுத்தி பிரிவினவாதத்தினை ஏற்படுத்துவதற்கு சிறு கும்பல் ஒன்று பின்னனியாக இருப்பதனால் அனைவரும் பாதிக்கப்படுகின்றனர்.

1990 ஆம் ஆண்டு வீரமுனையில் ஏற்பட்ட கலவரமும் எங்கிருந்தோ வந்த ஒரு பின்னனியில் ஏற்பட்டது. ஆனால் நாங்கள் அன்மையில் இருந்தவர்கள் இங்குள்ள தமிழர்களாலோ ஏற்பட்டவைகள் அல்ல. அந்த நேரத்திலும் அன்னியொன்னியமாகவே இருந்தோம். தற்போது ஏற்பட்ட பிரச்சினையும் ஏதோ ஒரு கும்பலினால் ஏற்பட்ட பிரச்சினைதான். அன்மையில் நான் புத்தங்கலையில் சிங்களவரின் வீட்டிற்கு சென்ற போது அவர்கள் மிகவும் கவலையடைந்தனர். நாங்கள் முஸ்லிம்களிடம் சென்றுதான் வியாபாரம் செய்து பிழைத்துக் கொண்டிருக்கின்றோம். முஸ்லிம் மக்கள் எங்களை எப்போதும் ஆதரித்துக் கொண்டிருப்பவர்கள் என்று கூறினார்கள்.

ஆனால் இந்தக் கும்பல்களை வைத்து நாங்களும் இவர்கள் முஸ்லிம்கள், தமிழர்கள் நாட்டை விட்டு வெளியேற வேண்டும் என்று ஒரு சிலர் பேசுவதற்காக கண்டனம் தெரிவிக்காமல் இருக்க முடியாது. அமைதியான முறையில் நிதானத்தோடு கண்டனம் தெரிவிக்க வேண்டும் என்பதனையும் நான் சபையோர்களிடம் கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இந்த விடயங்களில் மிகவும் நிதானமாக செயற்பட வேண்டிய சூழல் காணப்படுகின்றது. பயந்தல்ல நாம் எழுத்தில் முன்வைக்கும் சகல விடயங்களையும் கவனமாக உச்சரிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

கௌரவ உப தவிசாளர் அவர்கள் கூறிய கட்டுப்பாடு தொடர்பான விடயங்கள் சபை தீர்மானமாக மேற்கொள்ள வேண்டும்.

**தீர்மானம் 06**
சபையின் ஊழியர்கள் மத்தியில் நிர்வாகக் கட்டுப்பாட்டினை கண்டிப்பாக மேற்கொள்ள வேண்டும் என சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உப தவிசாளர் | வீ. ஜெயச்சந்திரன் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ. அச்சி முஹம்மட் |

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
2016 ஆம் ஆண்டில் ஆரம்பித்த சில வேலைகள் இன்னும் நிறைவேறாமல் இருக்கின்றது. இது தொடர்பாக நாம் முடிவுகள் எடுக்க வேண்டும். ஆரம்பத்தில் மாகாண சபைகள் இட்ட பிழையினால் மக்கள் பாதிப்படையக் கூடாது. இதில் உள்ள குறைபாடுகளை ஆராய்ந்து முடிவுக்கு கொண்டுவர வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம். மாஹிர்அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, சம்மாந்துறை பிரதேச சபையில் அரசியல் ரீதியான நிர்வாகம் இல்லாத காலத்தில் வந்த குறைபாடுகள் அரசியல் நிர்வாகம் வந்த பின்பும் குறைபாடாகவே இருக்கின்றது. தாறுஸ்ஸலாம் கிழக்கு வீதி 05 மில்லியன் சென்ற வருடம் 2018 ஆம் ஆண்டு உள்ளூராட்சி உதவி ஆணையாளரினால் பத்திரிகையில் விலைமனு கோரப்பட்டு கொந்தராத்துக்காரரை தெரிவு செய்து கொடுக்கப்பட்டது. 40 வீதமான வேலைகள் நடைபெற்றுள்ளது. அதற்கான கொடுப்பனவும் வழங்கப்பட்டுள்ளது. மிகுதி வேலை இன்னும் செய்யவில்லை. இதற்கு நாங்கள் பொறுப்பாக முடியாது. ஏனென்றால் உள்ளூராட்சி உதவி ஆணையாளரினால்தான் கொந்தராத்துக்காரர் தெரிவு செய்யப்பட்டார். அவர்கள்தான் கடுமையான நடவடிக்கை எடுத்து வேலைகளை முடிப்பதற்கு உதவி செய்ய வேண்டும்.

**தீர்மானம் 07**
எமது சபையினால் செயற்படுத்தப்படும் சேதனப் பசளைகளை ஏனைய சபைகளின் விலை நிர்னயத்திற்கேற்ப 1Kg 10 ரூபா வீதம் விற்பனை செய்வதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.சி. முஹம்மட் சஹீல் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | கே.எல். சிஹாமா |

**தீர்மானம் 08**
2019 ஆம் ஆண்டுக்கான அனுமதிக்கப்பட்ட PSDG (மூன்று) வேலைத்திட்டங்கள் சம்பந்தமாக உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் இருந்து அறிவிக்கப்பட்டுள்ளது. இவ் வேலைத்திட்டங்களுக்கு மதிப்பீட்டறிக்கை தயாரித்து உடனடியாக அனுப்புவதற்கும் மற்றும் இவ் வேலைத்திட்டங்களை அந்தந்த பிரதேசத்தில் அமைந்துள்ள சனசமூக நிலையங்களுக்கு வழங்கி அமுல்படுத்தவும் சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.சி. முஹம்மட் சஹீல் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | என். கோவிந்தசாமி |

**கௌரவ உறுப்பினர் எம்.எஸ். சரீபா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, எமது சபையின் பெண் பிரதிநிதியான கௌரவ உறுப்பினர் சிஹாமா அவர்கள் உளவியல் துறையில் பட்டப்படிப்பை முடித்து பட்டத்தினை பெற்றுள்ளார் என்று மிகவும் மகிழ்ச்சியுடன் சபையில் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
சபை சார்பில் கௌரவ உறுப்பினர் சிஹாமா அவர்களுக்கு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம். மாஹிர்அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, மதீனா உம்மா வீதி 840M நீளமான வீதியினை I Road Project இல் செய்வதற்கு பிரேரிக்கப்பட்டு நீங்கள் எழுத்து மூலம் அதனை செய்ய வேண்டாம் என்று கூறியும் குறிப்பிட்ட தூரம் ஆரம்பத்திலும் இல்லாமல் முடிவிலும் இல்லாமல் நடுவில் மாத்திரம் வீதி போடப்பட்டுள்ளது. இதனால் 840M நீளமான வீதி இல்லாமல் போகக்கூடிய சந்தர்ப்பமும் உள்ளது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
நீங்கள் கூறுவது நியாயமான கருத்து. இதுதான் எமது ஊர் அரசியல்வாதிகளின் நிலைப்பாடு. எமது சபை மற்றய சபைகளை போலல்லாமல் எமது ஊருக்கு வருகின்ற அபிவிருத்திகளுக்கு எந்தத்தடங்களும் இல்லாமல் விட்டுக்கொடுத்திருப்பதனால் சபையின் கட்டுப்பாடுகள் மதிக்கப்படுவதில்லை சபையின் கௌரவம் பாதுகாக்கப்பட வேண்டும்.

**கௌரவ உப தவிசாளர் வீ. ஜெயச்சந்திரன் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, பொதுவான விடயம் என்னவென்றால் நாடு பூராகவும் தற்போது சமுர்த்தி அமைச்சினால் சமுர்த்தி முத்திரைகள் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. தற்போது சம்மாந்துறைப் பிரதேசத்திலும் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. அதில் பல்வேறுபட்ட முறைகேடுகள் இடம்பெறுகின்றது. அதாவது தொழு நோயாளியுடன் இருப்பவருக்கு சமுர்த்தி முத்திரை இல்லை. கடை வைத்திருப்பவருக்கு சமுர்த்தி முத்திரை வழங்கப்பட்டுள்ளது. இது என்ன அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது என்பது தெரியவில்லை. இவ்வாறான பாரதூரமான அநீதி இழைக்கப்படுகின்றது. இதனைக் கண்டித்து மாவட்ட சமுர்த்தி ஆணையாளருக்கும், மத்திய சமுர்த்தி ஆணையாளருக்கும் எழுத்து மூலம் கடிதத்தினை சபை மூலமாக வழங்குவது சிறந்தது என நான் கருதுகின்றேன்.
மேலும் வளத்தாப்பிட்டியை பொறுத்தவரையில் மிகவும் அநீதிகள் இழைக்கப்படுகின்றது. தயாகமகேயின் இணைப்புச் செயலாளர் என்று கூறிக் கொண்டு அவரது உறவினர்களுக்கும், தெரிந்தவர்களுக்கும், வசதியானவர்களுக்கும் சமுர்த்தி முத்திரை வழங்கிக் கொண்டிருக்கின்றார்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இவ் விடயம் தொடர்பாக எமது கௌரவ உறுப்பினர் கோவிந்தசாமி அவர்களுக்கும் அனுபவம் உள்ளது. இதில் உள்ள பிரச்சினை என்னவென்றால் எமது ஊரில் தகுதியற்றவர்கள் சமுர்த்தி முத்திரை எடுக்கின்ற விடயம் அனைவருக்கும் தெரியும். நாம் அவர்களை இனங்காண்பதில்லை. ஆனால் மக்கள் பிரதிநிதிகள் என்ற வகையில் பிரதேச செயலாளருக்கு சிபாரிசு செய்வதற்கு உங்களுக்கு அனைத்து அதிகாரங்களும் இருக்கின்றது. எனவே தகமை உள்ளவர்களை அடையாளம் கண்டு நீங்கள் சிபாரிசு செய்து பிரதேச சபைக்கு பிரதியிட்டு பிரதேச செயலாளருக்கு நேரடியாக அனுப்பி வைக்கலாம்.

**கௌரவ உறுப்பினர் ஏ. அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, எமது சபை மூலம் ஒருவரை நியமித்து அனைத்துப் பிரதேசத்துக்கும் சென்று தகவல்களை திரட்டி அதன்படி செய்தால் சிறப்பாக இருக்கும் என்பதே எனது கருத்து.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கௌரவ உறுப்பினர்களது பகுதியில் உள்ள தகுதியான குடும்பங்களின் விபரங்களை பிரதேச செயலாளருக்கு நேரடியாக முகவரியிட்டு பிரதேச சபைக்கு பிரதியிட்டு அனுப்பி வைத்தால் நிச்சயமாக நான் அதன்படி செயற்படுவேன். ஏனென்றால் சமுர்த்தி முத்திரை வழங்குவது பிரதேச செயலகத்தின் கீழ் செயற்படுவது அவர்களின் கடமைகளில் நாம் தலையிட முடியாது. ஆனால் மக்கள் பிரதிநிதிகள் என்ற ரீதியில் நாம் எமது சிபாரிசுகளை செய்யலாம். பிழைகள் நடந்தால் சுட்டிக்காட்டலாம் அது எமது கடமையாகும்.

**கௌரவ உறுப்பினர் ஏ. யூசுப் லெவ்வை அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இத் திட்டத்தை அரசாங்கம் நடைமுறைப்படுத்த என்னிய போது சமுர்த்தி அதிகார சபையினால் அல்லது அமைச்சினால் ஒவ்வொரு பிரதேச செயலகங்களுக்கும் மக்கள் மத்தியில் சமுர்த்தி பெற தகுதியானவர்களை தெரிவு செய்யக்கூடிய குழுவின் 03 முக்கியஸ்தர்கள் நியமிக்க வேண்டும் என்று இருந்தது. அதன் அடிப்படையில் சம்மாந்துறை, நாவிதன்வெளி, இறக்காமம் போன்ற பிரதேச செயலகங்களுக்கு என்னால் முன்வைக்கப்பட்டவர்களை அமைச்சுக்கு அனுப்பி அதன் மூலம் அந்தந்த பிரதேசங்களுக்கு அவர்கள் தெரிவு செய்யப்பட்டு அனுமதி வந்தது. ஆனால் அப்படிப்பட்டவர்கள்கூட பிரதேச செயலகத்தினால் வழிநடாத்தப்படாமல் இருந்ததையும் அறியக்கூடியதாக இருந்தது. இவாறான நிலையில்தான் தற்போது வசதி குறைந்த மக்களுக்காக வழங்கப்படும் சமுர்த்தி மூலம் சம்மாந்துறை பிரதேசத்தில் அதனை அவதானித்த போது சில அரசியல் கட்சி பிரதிநிதிகள் ஊடாக அழுத்தம் கொடுக்கப்பட்ட நிலைகள் இருக்கின்றதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

சம்மாந்துறை பிரதேச செயலகத்தில் புதிதாக வழங்கப்பட்ட சமுர்த்திப் பயனாளிகளில் அதிகமானவர்கள் அப் பட்டியலுக்கு புறம்பாக அதிகமான தமிழ் மக்களுக்கு வழங்கப்பட்டிருப்பதாகவும் முஸ்லிம்களுக்கு அநீதி இழைக்கப்பட்டிருப்பதாகவும் என்னிடம் பிரதேச செயலாளர் கேட்டார். இதில் எனக்கு சம்மந்தம் இல்லை என்று கூறி அதில் இருந்து தவிர்ந்து கொண்டேன். என்னிடமும் பல மக்கள் விண்ணப்பங்களை வழங்கியுள்ளனர். சபையின் கௌரவ உறுப்பினர் என்ற வகையில் என்னால் முடிந்தவரை அமைச்சர்களுடன் பேசி அவர்களுக்கு சமுர்த்தி முத்திரைகளை பெற்றுக் கொடுக்க முயற்சிப்பேன்.

**கௌரவ உறுப்பினர் எஸ். நளீம் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, வழங்கப்பட்ட சமுர்த்திக் கொடுப்பனவு எந்த விதத்திலும் தகுதியற்றவர் என்று எங்களால் இனங்காணமுடியுமாக இருந்தால் நாங்கள் இலகுவாக அதனை பிரதேச செயலகத்தில் உள்ள தகவல் அறியும் சட்டத்தின் மூலம் அவர்களுக்கு சிபாரிசு செய்த உத்தியோகத்தரை அறிந்து கொள்ளமுடியும்.

எமது சபையிலே கடந்த ஜனவரி மாதம் எடுக்கப்பட்ட முடிவின் பிரகாரம் புதிதாக சபைக்கு பாரப்படுத்தப்பட்ட சிறுவர் பூங்காவிற்கு காவலாளிகளை நியமிப்பதற்கு புதிய காவலாளிகளை பெற்றுக் கொள்வதற்காக முடிவு செய்யப்பட்டு அதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டு நேர்முகப் பரீட்சை நடாத்துவதற்காக அவர்களுக்கு நேர்முகப் பரீட்சைக்கு சமூகமளிப்பதற்கான விண்ணப்பப் படிவம் உரிய காலத்தில் கிடைக்கப் பெறாமையினால் அந் நேர்முகப் பரீட்சைக்கு விண்ணப்பித்த அதிகமானவர்கள் கலந்து கொள்ளாத குறைபாடு உள்ளது. இந் நாட்டில் அவசர கால சட்டமும், ஊரடங்குச் சட்டமும் அமுலில் இருந்த காலத்தில் குறிப்பிட்ட ஒரு வார காலத்தில் விண்ணப்பப் படிவம் அனுப்பி வைக்கப்பட்டு நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்டிருக்கின்றது. அதிகமானவர்களுக்கு நேர்முகப் பரீட்சை நடந்து முடிந்ததன் பின்னர்தான் அதற்கான விண்ணப்பப் படிவம் கிடைக்கப் பெற்றுள்ளது.

எனவே இதில் குறிப்பாக எடுத்துக் கொண்ட விடயம் அந்தப் பிரதேசத்தில் உள்ள தகுதியான நபர்களை உள்வாங்க வேண்டும் என்பது. எனவே இதற்கு மாற்று வழி என்ன என்பதை சபை மூலம் தெரிவித்தால் சிறப்பாக இருக்கும். ஏனென்றால் 04 மாத காலமாக நான் கூறி வந்த விடயம் மிகவும் அவசரமாக செய்யப்பட்டதற்கு என்ன காரணம் என்பதும் தெரியாமல் உள்ளது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
உறுப்பினர்கள் சபையில் பேசும் போது மிகவும் தெளிவாக இருக்க வேண்டும். ஏனென்றால் நடைமுறையில் எந்தவொரு ஒளிவு மறைவும் இல்லாமல் 05 ஆம் மாதம் 09 ஆந் திகதி அந்தப் பகுதியைச் சேர்ந்த 12 பேருக்கு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளது. அதில் 05 பேர் சமூகமளிக்கவில்லை. தெரிவு செய்யப்பட்ட அனைவரும் அந்தப் பகுதியைச் சேர்ந்தவர்கள். அதாவது கல்லரிச்சல் 01, 02, புளக் ஜே மேற்கு போன்ற பகுதியைச் சேர்ந்தவர்கள். எம்மால் சிபாரிசு செய்தவருக்கு கிடைக்கவில்லை என்பதற்காக அனைத்து செயற்பாடுகளையும் குறைகூறக்கூடாது. ஏனென்றால் சபை வந்ததில் இருந்து உள்வாங்கப்பட்டவர்கள் கட்சி பேதங்களுக்கு அப்பால் தெரிவு செய்யப்பட்டதை நீங்கள் அறிந்திருப்பீர்கள். வெளியில் இருந்து எவரையும் எடுக்கவில்லை. அந்தப் பகுதியில் உள்ளவர்களைத்தான் தெரிவு செய்யப்பட்டுள்ளது. எந்தவொரு உள் நோக்கமும் இல்லாமல்தான் நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்டது.

**கௌரவ உறுப்பினர் ஏ. யூசுப் லெவ்வை அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, சம்மாந்துறை பிரதேசத்தில் தற்போது பாதைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. அந்த நிலையில் பிரதேச செயலகத்தின் ஊடாக பல பாதைகள் அமைக்கப்பட்டு வருகின்றது. அதன் அடிப்படையில் மல் 09 ஆம் வீதி அமைப்பதற்கு ஆரம்பிக்கும் போது மல் 10 ஆம் வீதியில் 04 பக்கமும் பாதைகள் பிரிகின்றது. அச் சந்தியில் 04 பக்கமும் சிறிதளவு வீதிகள் போடப்பட்டுள்ளது. இதே நேரத்தில் மல் 09 ஆம் வீதியில் பாதையினை ஆரம்பிக்கும் போது பாதையின் 280M க்கு அப்பால்தான் ஆரம்பிக்க வேண்டும் என்று பிரதேச செயலக உத்தியோகத்தர் என்னிடம் கேட்டார். மல் 09 ஆம் வீதிக்காக 02 ஆம் கட்டம் என்று வீதி

கொண்டுவரவில்லை. மல் 09ம் வீதியை செப்பனிடவே கொண்டு வந்தேன் என்று அவரிடம் கூறினேன்.

அவ்வாறு வீதி போடும் போது 180M க்கு மேற்பட்ட வீதி மீதப்படுகின்றது. ஆனால் தொலைவில் இருந்து ஆரம்பிக்க வேண்டும் என்று திணிப்பது சரியான முறை இல்லை. அதனை அவர்களே செய்திருக்க வேண்டும். எனவே அதனை பிரதேச சபை உத்தியோகத்தர் மூலம் சீர்செய்து தருமாறு கேட்டுக் கொள்கின்றேன். மேலும் எனது வீட்டுக்கு அருகில் வீதி போடப்பட்டு சிறு பகுதி விடப்பட்டுள்ளது. அதனை பிரதேச சபையினால் மிகுதி வேலைகள் செய்யப்பட்ட போது இதனையும் உள்வாங்கும் படி குறிப்பிட்டிருந்தேன். அக் குறைபாடு 23 வருடமாக இருந்து வருகின்றது அதனையும் நிவர்த்தி செய்து தருமாறு வேண்டிக் கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

பாதைகள் பிரதேச சபைக்குரியது பணம் அரசாங்கத்திற்குரியது நீங்கள் சிபாரிசு செய்து கொண்டு வருகின்றீர்கள். அதனை எவ்வாறு செய்ய வேண்டும், எங்கு ஆரம்பிக்க வேண்டும் என்று தீர்மானிக்க வேண்டியது பிரதேச சபை. ஒரு பாதை அமைப்பதானால் முதலில் திட்டமிடல் இருக்க வேண்டும். ஒரு பாதை செய்யப்பட்டு இடையில் விடுபட்டிருந்தால் அதில் இருந்தே ஆரம்பிக்கப்பட வேண்டும். கௌரவ உறுப்பினர்கள் வீதி அபிவிருத்திக்கு சிபாரிசு செய்யும் போது சபை உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடி அதில் தெளிவு கண்டு செயற்பட்டால் எந்தப் பிரச்சினையும் வராது.

சென்ற வருடம் வரவு செலவுத் திட்டத்தில் மிகுதியாக உள்ள பணத்தின் மூலம் பாதைகளில் மிகுதியாக விடப்பட்டவைகள் 15M இல் இருந்து முடியுமானவரை அப் பணத்தைக் கொண்டு செய்தோம். இந்த வருடமும் அவ்வாறு மிகுதியான பணம் வந்தால் அதனை செய்ய முடியும். எவரும் இதில் புறக்கணிக்கப்படவில்லை. திட்டமிடல் இருந்தால் எதிலும் பிழைகள் ஏற்படாது என்று கூறி சபையின் அமர்வினை இனிதே முடித்துக் கொள்கின்றேன்.

AM.முஹம்மட் நௌசாட்
தவிசாளர்
சம்மாந்துறை பிரதேச சபை.

செயலாளர்
சம்மாந்துறை பிரதேச சபை

செயலாளர்
சம்மாந்துறை பிரதேச சபை